மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
ஸ்ரீரங்கம்
OS.No.1219/2019

21.04.2026

DW-1 பெயர். ஜெபமாலை த/பெ. மைக்கேல் (வயது -79 /2026)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>

வழக்கு சொத்து ஆதியில் சர்வே எண் .401 என்றும் அது முழுக்க குட்டையாகவும், நீர்தேக்கமாகவும் அரசு தரிச நிலமாக இருந்தது என்றால் சரிதான் . அரசு தரிசு நிலமாக 1970 ம் வருடத்தில் அரசாங்கம் வெளியிட்ட A பதிவேடுபடியும் வழக்கு சொத்து ஆதியில் சர்வே எண்.401 என்ற அடிப்படையிலும் அரசு தரிசு நிலமாக இருந்தது என்றால் சரிதான் . அதற்கான A பதிவேடு ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆவணத்தைபார்த்தால் சொல்லமுடியும் அதன்படி 1970 ல் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அ பதிவேடு ஆவணத்தில் சர்வே எண் .401 என்பது அரசு தரிசுநிலமாக இருந்தது என்றால் சரிதான் . அதற்கான ஆவணம்தான் தற்போது என்னிடம் காட்டப்படுவதாகும் . **அந்த ஆவணம் நகல் வா .சா.ஆ.9 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** அதற்கு பின்னால் சர்வே எண் .401 க்கு கட்டுப்பட்டஅரசு தரிசு நிலமான நீர்தேக்க குட்டையை எங்கள் ஊரை சார்ந்த பலநபர்களுக்கு அரசாங்கம் சிறு, சிறு பகுதியாக பிரித்து பட்டாபோட்டு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன்படி பட்டா எண் .377 எனது முன்னோர் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது,. நான் திருச்சி கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன் . அந்தகோட்டாட்சியர் மனுவில் நான் பட்டா எண் .377 குறித்து தகவல் சொல்லியுள்ளேன் என்றால் திருச்சி கோட்டாட்சியர் அவர்களிடம் நான் அளித்த மனுமீதுதகவல் சொல்லி அது குறித்து அவர் விசாரணை செய்தார் . நான்கொடுத்த மனுவின்மீது கோட்டாட்சியர் உத்தரவு போட்டார். என்னிடம் காட்டப்படுவதுஅந்த உத்தரவு என்றால் சரிதான் . **அந்த உத்தரவின் நகல் வா.சா.ஆ.10 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** அந்த உத்தரவில் பட்டா எண்.377 குறித்து அவரது விசாரணையில் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான் . RDO நடத்திய விசாரணையில் வா .சா.ஆ.10 ஆவணத்தில் தாசில்தார் தாக்கல் செய்த அறிக்கைப்பற்றியம் RDO உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த உத்தரவில் RDO பட்டா எண்.377 குறித்து மைக்கேல் என்பவர் பேரில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் இல்லை . பட்டா எண்.377 எனது தந்தையரான பாப்பு (எ) மைக்கேல் என்பவருக்கு அரசாங்கத்தால் சர்வே எண் .401/14 க்கு உரிய சொத்தை மேற்படி பட்டா மூலம் அரசாங்கம் பாத்தியபடுத்தியது என்றால் சரியல்ல . அந்த சொத்து சர்வே எண் .401/14 க்கு கட்டுப்பட்ட சொத்து எனது தந்தையார் பெயருக்கு அரசாங்கத்தால் பட்டா எண் .377 ன்படி கொடுக்கப்பட்டு அதன்படிஅவர்காலத்தில் அனுபவித்துவந்தார் என்றால் சரியல்ல. நான் எனது தந்தையாருக்கு பாத்தியப்பட்ட பட்டா எண்.377 யை அனுபவித்து வந்தார் என்பதை மறைத்து பொய் சாட்சியம்

அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல . எனது தந்தையார் பாப்பு (எ) மைக்கேல் பெயரில் சர்வே எண் .401/14 ல் அவர் பெயரில் அ பதிவேடு பதியப்பட்டு அனுபவித்து வந்ததற்கான ஆவணத்தை நான் பாாத்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அவர்கள் மாற்றி பதிவு செய்துள்ளார்கள். எனது தந்தையார் பாப்பு (எ) மைக்கேல் என்ற பெயரில் சர்வே எண் .401/14 க்குரிய சொத்து அ பதிவேடு இருந்து வந்தது என்றும் அந்த ஆவணம்தான் வா.சா.ஆ.9 என்றும் நான் தற்போது அந்த ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்துவிட்டார்கள் என்று சட்டவிரோத ஆதாயத்திற்காக பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல . என்னுடைய மகன் ஜார்ஜ்வில்லியம் திருச்சி முதலாவது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் .261/2025 ன்கீழ் சிவில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான் . அந்த சிவில் வழக்கில் எனக்கும் எனது சகோதரர் அல்போன்ஸ்க்கும் பாகபிரிவினை ஏற்பட்டது குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளரா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார் . எனது மகள் ஜார்ஜ் வில்லியம்க்கும் எனக்கும் இன்றுவரைதந்தை மகன் என்ற உறவும் பேச்சுவார்த்தையும் நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றால் சரிதான் . எனக்கும் வாதிக்கும் , தாவா சொத்து உரிமை பிரச்சனைகுறித்து இருந்து வருகிறதுஎன்றால் சரிதான். நான் நாளது தேதிவரை வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டு எந்தநீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனதுமகன்தான் வழக்கு தொடுத்துள்ளார் . எனது மகன் ஜார்ஜ் வில்லியம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை பற்றிதான் குறிப்பிடுகிறேன் என்றால் அது தனி வழக்கு . அந்த வழக்கில் எனது மகன் எனக்கும் எனது சகோதரர் அல்போன்ஸ்க்கும் பாகபிரிவினை ஏற்பட்டு அவர் , அவர் பெயரில் தனி , தனியாக சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது . எனது மகனை சாட்சியாக விசாரிப்பேனா என்றால் விசாரிக்கமாட்டேன் . வா.சா.ஆ.1 பட்டா ஆவணஎண்.840 மற்றும் 913 ன்படி தனிப்பட்டாகவும் , கூட்டுபட்டாகவும் வழங்கப்பட்டு அனுபவித்து வந்தோம் என்றால் பழைய பட்டா படி சரிதான் . RDO உத்தரவுக்கு எதிராக ஆரோக்கியசாமி மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் சரிதான் . அந்த மேல்முறையீட்டில் சிவில் வழக்கு முடிந்தபிறகுதான் அது குறித்து உத்தரவு பிறப்பிக்கமுடியும் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான் . வாதி தரப்பில் என்னிடம் காண்பிக்கப்படும்வருவாய் துறை ஆவணத்தில் கிராம செட்டில்மென்ட் ஜமாபந்தி சிட்டாவில் சர்வே எண் .401/14 க்கு TK.191/2001–2002–:ன்படி தேதி 14.08.2001 ன்படி என்சகோதரர் அல்போன்ஸ் பெயரில் பட்டா மாறுதல்காள உத்தரவு பதிவு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட ஜமாபந்தி சிட்டாவில் ஏற்பட்டுள்ள TK–191/2001–2002 ன்படி ஏற்பட்ட பதிவுக்கு எதிராகதான் நான் RDO விடம் மனு அளித்தேன் என்றால் சரிதான் . இந்த விவரம் முழுமையாக எனக்கு தெரிந்ததால்தான் நான் கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் மேற்படி ஜமாபந்தி சிட்டா ஆவணம் என்னிடமும் உள்ளது அந்த ஆவணத்தின் நகல்தான் இது அதனால்

இதுபற்றி முழுமையான விவரம் தெரிந்துதான் நான் RDO விடம்புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் . **அந்த ஜமாபந்தி சிட்டா ஆவணம் நகல் (எண்ணிக்கை–4) வா.சா.ஆ–11 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் நகல் என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது ).** என் பெயரில் கிரையம் பெற்றதாக கூறப்படும் பத்திரம்அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் முதலில் சாட்சி உள்ளது என்று கூறினார் பின்னிட்டு சாட்சி தான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் அசல் ஆவணத்தை என்னிடம் இருந்து மேற்படி அசல் ஆவணத்தை வாதி திருடி சென்று அவர் வசம் வைத்திருந்ததை என் தரப்பில் என் மகனும் மற்ற இரண்டு சாட்சிகளம் அதனை பார்வையிட்டுவந்தார்கள் என்று தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . மேற்கண்ட இரண்டு நபர்களை இந்தவழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேன் . எங்களிடம் சமரசம் செய்யும்போது அரோக்கியசாமி என்பவரும் எனது பங்காளியும் பார்த்து சொன்னார்கள் அவர்களைநான் சாட்சியாக விசாரிக்கவுள்ளேன் . நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் அசல் ஆவணம் என்வசம்தான் நாளதுதேதிவரை உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் வழக்கிற்காக பாதகமாக அமையும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது பதிலுரையில் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் அசல் ஆவணத்தை வாதி திருடி சென்றுவிட்டதாகவோ , மேற்கண்ட இரண்டு நபர்கள் பார்த்து என்னிடம் தகவல் சொன்ன விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான் . கிரையம் பத்திர பதிவு ஆவணத்தில் அசல் ஆவணத்தை பிரதி எடுத்ததில் நகல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் ஆவணங்கள் பத்திரத்தை எனது பெயரில் வாங்கவில்லை என்றால் இல்லை . பி.வா.சா.ஆ.3 பத்திரங்கள்(மொத்தம்–4) எனது பெயரில் வாங்கியதாக இல்லை சரிதான் . பத்திரத்தில் முதல் பக்கத்தில் சாமிநாதன் என்று எனதுதாத்தா பெயரில் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான் . மற்ற மூன்று பத்திரங்களில் எனது தந்தையார் மைக்கேல் பெயரில் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
**Srirangam**